DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

STC No.187/2020

Deposition of Witness for – Prosecution :PW1
Defence :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாபு | ஜாதி | : | |
| த/பெ | : | ஜெயராமன் | மதம் | : | |
| கிராமம் | : | முகப்பேர் | தொழில் | : | வியாபாரம் |
| வட்டம் | : | சென்னை | வயது | : | 57/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி - 13.06.2025**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>: PW1**

1. நான் தாக்கல் செய்த கூட்டு பங்குதாரர் பத்திரத்தில் வியாபாரம் விவரம் குறித்த இடத்தில் ஆச்சி மசாலா என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வேறு வியாபாரம் தொடங்கவேண்டும் என்றால் பங்குதாரர் காலத்திற்கு ஏற்றவாறு முடிவெடுக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனடிப்படையில் நானும் எதிரியும் ஒப்பந்தம் போட்டுக்கொண்டேன் என்றால் சரிதான். பு.சா.ஆ.3 ஒப்பந்தம் 16.03.2019 ஆம் தேதிபோடப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தம் 1 ஆண்டிற்கு என்று போடப்பட்டு தேவைப்பட்டால் நீடித்து கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தம் நானும் எதிரியும் இணைந்து Vignesh & Co சார்பாக ஒப்பந்தம் போடப்பட்டது அதில் நானும் சாந்தியும் கையெழுத்து செய்துள்ளோம் என்றால் சரிதான். நானும் என் மனைவியும் ஒப்பந்தத்தில் கையெழுத்து செய்த போது நல்ல மன நிலையில் இருந்தோம் யாருடன் கட்டாயமின்றி கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான். பு.சா.ஆ.3 ஆவணத்தில் விலை உயர்ந்த கார்களை வாங்கி அதிக லாபத்திற்கு விற்கபடுவதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். Vignesh & Co அனைத்து வகையான பொருட்களை வாங்கவும் விற்கவும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் என்று

கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தின் படி இரு தரப்பினரும் சட்டப்படி கட்டுபடுத்துவதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒப்பந்தத்தில் பங்குதாரரின் செயல் குறித்து கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. ஒப்பந்தத்தின் படி பழைய கார்களை வாங்க நான் கடன் பட்டவர் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். தொழில் தொடக்கம் முதலீடாக ரூ.1 கோடி செலுத்த வேண்டும் என்றும் மேற்படி தேவைப்பட்டால் கூடுதல் தொகை செலுத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பழைய கார்களை பழுது பார்த்து விற்க கூடிய நிலைக்கு கொண்டு வரும் பொறுப்பு எதிரியுடையது என்று சரத்தில் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதற்காகக்குரிய செலவுகளும் நான் தர கடமைப்பட்டவர் என்று கூறப்பட்டுள்ளது என்று சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒப்பந்தத்தின் படி எதிரி காட்டும் நபர்களுக்கு மட்டும் தான் காரை விற்க வேண்டும் என்று எதுவும் கூறவில்லை என்றால் வாய் மொழி ஒப்பந்தம் செய்து கொண்டோம். விற்பனை விலையை இருவரும் செய்யும் செலவை பொறுத்து நிர்ணயிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். விற்பனையில் வரும் லாபம் மற்றும் நஷ்டம் வீதத்தில் எதிரிக்கு 70% எனக்கு 30% என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. ஆரம்ப கட்டத்தில ரூ.1 கோடி நிறுவனத்தில் முதலீடு செலுத்தினேனா என்றால் ரூ.81,77,000/- செலுத்தினேன் அந்த தொகைக்கான கார்களை எதிரியே விற்பனை செய்து மொத்தத்தொகையை எடுத்து கொண்டார். மேற்படி ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும் என்றால் எழுத்து பூர்வமாக ஒரு மாதத்திற்கு முன்பாகவே அறிவிப்பு அனுப்ப வேண்டும் என்று உள்ளது என்றால் சரிதான். ஒரு மாதத்திற்குள் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டால் ஏற்படும் நஷ்டத்தை மற்றொரு பங்குதாரர் ஏற்றுக்கொள்ளமாட்டார் என்று உள்ளது. ஒவ்வொரு கார் வாங்கும் போது அதற்கு ஈடாக எதிரி காசோலை தர வேண்டும் என்று ஒப்பந்தத்தில் சரத்து எதுவும் இல்லை என்றால் சரிதான். பு.சா.ஆ.4 ஆவணத்தில் எதிரியுடையதும் என்னுடையதும் கையெழுத்து எதுவும் இல்லை என்றால் சரிதான். பு.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள விவரம் அனைத்தும் எந்த கணக்கு புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டது என்று அதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது வங்கி கணக்கு பட்டியலில் இருந்து விவரம் சேமித்து பு.சா.ஆ.4 ஆவணத்தை குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். பு.சா.ஆ-4 சட்டத்தின் படி நிலைக்கத்தக்க ஆவணம் இல்லை என்றால் சரியல்ல.

4. 7 காரும் வாங்கிய விவரம் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 7

காரும் எப்போது யாருக்கு விற்பனை செய்யப்பட்டது என்ற விவரம் குறிப்பிடவில்லை என்றால் எதிரி என்னிடம் கூறவில்லை. பு.சா.ஆ.4 ஆவணத்தில் கார்களை விற்பனை செய்த விவரம் இல்லை என்றால் சரிதான். மேற்படி 7 காரும் Finance மூலம் தொகை செலுத்த முடியாத கார்களும் விபத்தில் ஈடுபட்ட கார் ஆகும் என்றால் சரிதான். முதலாவது கார் Audi A4 Finance செலுத்த முடியாமல் பரிமுதல் செய்யப்பட்ட கார் என்றால் சரிதான். அந்த காரை வாங்குவதற்கு நானும் எதிரியும் மற்றும் முகவர் பாக்கியராஜ் உடன் சென்று பார்த்தோம் என்றால் சரிதான். அந்த காரை வாங்கி விற்பனை செய்வதில் எனக்கு சம்மதம் என்றால் சரிதான. அந்த வாங்க வேண்டும் என்றால் கொள்முதல் தொகையை எனது Vignesh & Co நிறுவனம் மூலமாக பணம் செலுத்தவேண்டும் என்றால் சரிதான். முகவர் பாக்கிராஜ்க்கு ரூ.60,000/- புரோக்கரேக்காக நான் கொடுத்தேன் என்றால் சரிதான். இரண்டாவது கார் Benz நேரடியாக Vignesh & Co ரூ.6,00,000/- கொடுத்து வாங்கப்பட்டது என்றால் சரிதான். காரை நான் நேரடியாக பார்க்கவில்லை.

5. மூன்றாவது கார் Benz பழுது பார்க்கும் செலவாக எதிரிக்கு ரூ.1,50,000/- மும் அதன் உரிமையாளர் இலட்சுமி என்பவருக்கும் ரூ.9,75,000/-மும் Vignesh & Co மூலம் செலுத்தப்பட்டது என்றால் சரிதான்.

K. Mahasakthi
B.B.A.L.L.BHons

Digitally signed by K. Mahasakthi B.B.A.L.L.BHons
Date: 2025.06.17 17:16:02 +0530